# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உங | சருவசித்து—ஆனி 1947—ஜூன் | மலர் ங |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

### தமிழ்க் களஞ்சியம்.

சென்னை மாகாணக் கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவினாசி லிங்கம் செட்டியார் அவர்கள் தமிழ்க் களஞ்சியம் ஒன்று தொகுக்கவேண்டு மெனக் கொண்ட எண்ணத்தையும், அதற்காக அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியையும் நாம் பெரிதும் கொண்டாடி, மனமாரப் பாராட்டுகின்றோம். அவர்கள் முயற்சி விரைந்து நற்பயன் தரவேண்டு மென இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

கொண்ட கருத்தினை நிறைவேற்றற்காகும் செலவுக்கெனக் கல்வி அமைச்சர் அவர்கள் திட்டப்படி, ஏறத்தாழ நூறாயிரம வெண்பொற்காசு வரையில் தமிழன்பர் பலரும் கையொப்பமிட்டிருப்பது நமக்குப் பெரு மகிழ்ச்சி தருகின்றது. என்றாலும், நூறாயிரம் வெண்பொற்காசுத் திட்டம் மிகக் குறைவு என்று கருதுகின்றோம். முன்னாள் தமிழகராதி (Tamil Lexicon) தொகுப்பதற்கெனத் திட்டமிட்ட நூறாயிரத்திற்கு மேல் பன்மடங்கு செலவாகியதை நாம் அறிவோம். இப்பொழுது மேற்கொண்டுள்ள தமிழ்க் களஞ்சியத் தொகுப்பு முயற்சியைச் செம்மையாக நிறைவேற்றவேண்டுமானால், இப்பொழுது கருத்திற்கொண்ட தொகையினும் இரண்டு பங்கேனும் மிகுதியாகச் செலவாகலாம். தமிழ்த்தாய்ப் பற்றும், பணியும் மிகுந்துவரும் இந்நாளில், இந்த

நற்றெண்டுக்கென எவ்வளவு பொருளுதவி வேண்டுமானாலும் பெருந்தமிழ்ச் செல்வர்களது உளமார்ந்த உதவியைத் திட்டமாகப் பெறலாம் என்பது திண்ணம். அதற்காய முயற்சிகளைத் தொடர்ந்து செய்துவரக் கல்வி அமைச்சர் அவர்களை வேண்டுகிறோம்.

கல்வி அமைச்சர் அவர்கட்கு இன்னொரு வேண்டுகோளும் கூற விரும்புகின்றோம். எடுத்துக்கொண்ட அலுவல் செம்மையாகவும் விரைவாகவும் முடியுமாறு உள்ளன்புடன் உண்மையாக உழைத்து, சிறந்த முறையிலும் விரைவிலும் தமிழ்க் களஞ்சியத்தை வெளிப்படுத்தற்கான முறைகளைக் கைக்கொள்ளக் கூடிய திறம் வாய்ந்த உண்மைத் தண்டமிழ்த் தொண்டர்களைத் துணைவர்களாகத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதே அவ் வேண்டுகோள் ஆகும்.

தமிழ்த் தாய், தன் அருமை மைந்தராகிய கல்வி அமைச்சர் அவர்களின் இச் சிறந்த முயற்சியை விரைவில் முடித்தருள்வதாக.

* * * * *

## தமிழ் நாட் டெல்லை.

நம் இந்தியநாட்டின் ஆட்சி நிலையின் புத்தெழுச்சிபற்றி, நாட்டின் உட்பிரிவுகள், உரிமைகள் முதலாய பலவற்றின் ஆராய்ச்சிகளுள், நாட்டுமொழிகள் பற்றிய ஆராய்ச்சிகள் சிலவும் தோன்றி இருத்தல் இயற்கையே. எம்மொழிகள் நாடு முழுவதற்கும் பொது மொழியாக வழங்கவேண்டும்? எம்மொழி எங்கெங்குச் சிறப்பு மொழியாக வழங்கவேண்டும் என்றாற்போன்ற ஆராய்ச்சிகளுள், தமிழ்மொழி, தெலுங்குமொழி வழங்கும் எல்லைபற்றி இதுகாலை அவ்விரு மொழி மக்களுள் என்ன வேறுபாடுகள் தோன்றுகின்றன.

இவ்வேறுபாடுகள் பண்டுதொட்டுவரும் நூல்களில் மொழியாராய்ச்சி இம் மொழியாளர்களது இருக்கை முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு முற்கால வழக்கு இக்கால நிலைகளை

நன்கு உணர்ந்துள நடுநிலையாளர்களாம் இருமொழிப் பெரியார்கள் அடங்கிய ஒரு நடுநிலை மன்றத்தாரால் உறுதி செய்யப் பெறும் முடிவினால் ஒழிதற்பாலன.

இந்நெறியில் தமிழரும், தெலுங்கரும் தத்தமக்குள் தக்கார் சிலரை ஒத்த அளவில் தேர்ந்து வெளியிடலும், அன்னோர்க்குத் தத்தமக்குத் தோன்றும் உண்மை உரிமை நெறிகளை எடுத்துக் காட்டவல்ல அறிஞர்கள் தத்தம் கருத்துக்களை எடுத்துக்காட்டலும் அம்மன்றத்தார் செய்யும் முடிவுகளை மகிழ்ந்தேற்றலும் சிறந்த முடிபாம். எனவே இம்முறையில் நந்தமிழ் மக்கள், தங்கட்குள் இன்ன முறையில் நின்று நம் உரிமையை எடுத்துக் காட்டி வெற்றிகாண வல்ல சிலபெரியாரைச் சுட்டிக் காட்டவும், பேரறிஞர்கள் அன்னார்க்குத் தத்தமக்குத் தோன்றும் உரிமை உரைகளை எடுத்துக் காட்டவும் வேண்டுகின்றோம். அங்ஙனம் தமிழ்ப் பேரறிஞர் எடுத்துக்கூறும் உரைகளை நம் பொழிலில் மிக்க மகிழ்வுடன் வெளியிடுவோம்.

தொல்காப்பிய முதலாகத் தமிழ் மொழியிலுள்ள நூல்களிலும், சங்க காலத்துப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை முதலாகவுள்ள தமிழ்ச் செய்யுட்களிலும் தமிழ் மொழி வழங்கும் நாடுகளின் எல்லையாகத் திருவேங்கடம் குமரி கீழ்க்கடல் மேல்கடல் குறிக்கப்பெறுதன இல்லை. தமிழ் மன்னர்கள் ஓரோர் காலத்து வட இமயத்து அப்பாலும் தம் ஆட்சியினைப் பரப்பியிருந்த உண்மைகள் தெளிவு பெற நிலைநாட்டப் பெற்றுள. ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் இன்றும் தமிழ் மக்கள் பெருகி நிற்கும் வாழ்க்கை நிலை முதலிய பலவும் தமிழ் மொழிக்குரிய நாட்டின் எல்லையைத் திட்டமாகக் காட்டவல்லன, இவற்றின் விரிவுரைகள் அடுத்த பொழிலில் வெளிவரும்.

* * * * *

## திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் மறைவு.

முந்நீர்ப் பள்ளம் திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் உலக வாழ்வு நீத்த செய்தி யறிந்து மிகவும் வருந்துகிறோம். திரு. பிள்ளை அவர்கள் தமிழும் ஆங்கிலமும் செவ்வையாகப்

படித்தறிந்தவர்கள். செந்தமிழ், தமிழர், முதலிய திங்கள் வெளியீடுகளில் அவர்கள் எழுதிய தமிழ்க் கட்டுரைகள் மிகச் சிறப்புடையன. அவர்கள் நம் சங்கத்தின் பால் பேரன்புடையவர்கள்; தமிழ்த் தாயின் வீர மகனுகச் சிறந்து தொண்டாற்றியவர்கள்; கல்லூரிகளில் ஆங்கிலப் பேரா சிரியராக விருந்து திறம்படப் பணியாற்றியவர்கள். இவர் கள் பிரிவு நம் தமிழ் நாட்டிற்குப் பெரியதோர் இழப்பாகும்.

* * * *

## நாட்டிற்குப் பொதுமொழி நாடும் நாட்டம்.

இதுகாலை, நம் நாட்டில் எழுந்த புது ஆட்சி நிலையில், நாட்டின் பொதுமொழியாக ஒன்று அமையவேண்டும்; அஃது 'இந்துஸ்தானி'யே யாகும் என்றதோர் கருத்து, நாட்டு மக்கட்கு வியப்பினைத் தருவதாகின்றது.

இதுபற்றி நம் தமிழ்நாட்டுப் பெருஞ்செல்வரும் நம் சங்கப் பேரன்பருமாகிய திரு கரு. முத்து. தியாகராசர் அவர்கள் எழுதிய அரிய கட்டுரை யொன்று இதன்கண் உளது. பொது ஆட்சி நிலைபற்றி எங்கோவுள்ள ஏதோ ஒரு மொழி, எங்கெங்கும் உள்ள எல்லா மக்களாலும், வலிந்து வருந்திப் பயின்று கைக் கொள்ளவேண்டு மென்ற இன்றி யமையாமை இல்லை. அத்தகைய வழக்கு எந்த நாட்டி லும் எந்த நாளிலும் இருந்ததில்லை; இருப்பதுமில்லை.

எனவே நமது நாட்டின் பல பிரிவுகளிலும் தொன்று தொட்டு உரிமை பெற்றுப் பயின்றுவரும் மொழிப் பயிற்சிகளை அவ்வாறே நிகழவிடாமல் மெலிவித்து, வேற்று மொழி யொன்றை வலிந்து புகுவித்து, பலவகை இடை யூறுகளை விளைவித்துக் கொள்ளும் நாட்டம், இதுகாலை, நம் நாட்டின் புது ஆட்சி நிலைக்கு எங்ஙனமும் வேண்டப் படுவதொன்றன்று.

* * * * *

தமிழ்ப் பொழில் உ௲ ஆம் பக்கத்தில் 18 ஆவது வரி யில் 1942 என்பதை 1892 என்று திருத்திக் கொள்க.

பொ—ர்.

# இந்திய நாட்டு மொழி.

(கரு. முத்து. தியாகராச செட்டியார்.)

அரசியல் அமைப்புக் குழு தொடக்கத்திலேயே ஒரு சிறந்த அரசியல் கருத்தை வம்பாகக் கிளப்பியிருக்கிறது. இந்தியாவின் அரசியல் மூல ஆதரவு அதன் நாட்டு மொழியாகிய இந்துஸ்தானியில் எழுதப்பட வேண்டுமென்று அவைத் தலைவர் திரு. இராசேந்திர பிரசாது அவர்கள் சொன்னதை அவை ஒரு நெறிப்பட்டு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நாட்டு மொழி இந்துஸ்தானி என்று சொல்வது நேராமா? அறமாகுமா? ஒரு சான்றாக, தமிழர்கள் இந்துஸ்தானியைத் தங்கள் நாட்டு மொழியென்று சொல்ல முடியுமா? உறுதியாக முடியாதே.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழியைத் தரக் கருதற்கு, அதை ஒரு தனிநாடென்று சொல்லுதற்கான வழி, முறைகள் இருக்கின்றனவா? இந்தியா, நூற்றுக் கணக்கான மொழிகளைப் பேசும் பல்வேறு இனமும் வகுப்புமுள்ள நாற்பது கோடி மக்களைக் கொண்ட, ஒரு சிறு உலக மன்றோ?

ஐரோப்பா (உருசியா இல்லாமல்) இந்தியாவின் அளவாகும். ஐரோப்பியர் தாங்கள் ஒரு மொழியுள்ளோம் என்று பெருமை கொள்ளவில்லையே. ஐரோப்பாவின் அளப்பரிய பெருமை ஒரு மொழியால் ஏற்பட்டதுமல்லவே. கானடா, தென் ஆப்பிரிக்கா, இஸ்பெயின், பெல்ஜியம், சுவிட்சர்லந்து முதலிய நாடுகளில் மக்கள் வெவ்வேறு மொழிகள் பேசிக்கொண்டு ஒற்றுமையாக வாழ்கின்றூர்கள். எந்த நாடும், பேரரசும் மொழியின் பலத்தால் ஒற்றுமையாக வளர்ந்ததாக வரலாறு கூறவில்லை.

இரண்டு மாபெரும் உலகப் போர்களினின்றும் விலகியிருந்த சுவிட்சர்லந்தில் நாற்பது நூறாயிரம் மக்களிடையே ஜெர்மன், பிரஞ்சு, இத்தலியன் ஆகிய மூன்று மொழிகளும் அரசியல் மொழியாக இருக்கின்றன. பெரும்பான்மையோர், நூற்றுக்கு 71 பெயர்கள், ஜெர்மன் மொழியும், இருபதுக்கு

மேல் பிரஞ்சு மொழியும் பேசிய போதிலும், இத்தலியன் பேசும் ஐந்துக்குட்பட்ட சிறுபான்மையோரை ஜெர்மன், பிரஞ்சை அரசியல் மொழியாகக் கொள்ளும்படி வற்புறுத்தவில்லை. மற்ருெரு நாடாகிய பெல்ஜியத்தில் பிலிமிஷ், பிரஞ்சு ஆகிய இரு மொழிகளும் அரசியல் மொழிகளாக வழங்கப்படுகின்றன. இன்னும் கானடாவில் பிரஞ்சும், ஆங்கிலமும், தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலமும், ஆப்பிரிக்கனும் அரசியல் மொழியாக இருக்கின்றன.

ஒருபுறம், சிறு உலகமாகிய இந்தியாவை ஒரே நாடாக்க ஒரு நாட்டு மொழியைத் தேடுகின்ருேம். மறுபுறம் இப்பொழுதுள்ள மாகாணங்களை மொழிவாரியாகப் பிரிக்க முயல்கின்ருேம். இது முரண்பாடன்ருே? சமயத்தைப் பொறுத்துத் தேசத்தைப் பிரிக்கவேண்டுமென்ற திரு. ஜின்னு அவர்களின் கனவும் இன்று நனவாக முடிந்திருக்கிறது. அங்ஙனமிருந்தும், அரசியல் அமைப்புக் குழு ஒரு நாட்டு மொழியை எண்ணிக் கனவு காண்கின்றது. இஃதென்ன!

தொடக்கத்தில் இந்தி இந்தியாவின் பொது நடப்பு மொழியாக இருக்குமென்று சொல்லப்பட்டது. ஆனுல் கலப்பான நடப்பு மொழி ஒரு அரசியல் மொழியாக இருக்க முடியாது. ஆரியம் மிகக் கலந்த, இந்தியை மகமதியர்கள் ஏற்றுக்கொள்ளாததினுல், இருபத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு உருது மிகவாகக் கலந்த இந்துஸ்தானி, இந்தியாவின் 'ராஷ்டிர' மொழியெனத் திரு. காந்தியார் அவர்கள் மாற்றிச்சொல்லுகிருர். திரு. காந்தியார் அவர்கள் நடப்பு மொழியிலிருந்து மெல்ல 'ராஷ்டிர' மொழிக்கு வந்துவிட்டார். 'ராஷ்டிர பாஷை' தான் இன்னதென்பதைத் தெளிவுபடுத்தும்படி இருமுறை நான் திரு. காந்தியார் அவர்களுக்கு எழுதியும் அவர் அதை இதுவரை விளக்கவில்லை. அது சற்றும் இயலாததாக இருக்கும் போலும்! இப்பொழுது பேரறிஞர் இராசேந்திர பிரசாது அவர்கள் இந்துஸ்தானி தான் இந்தியாவின் நாட்டு மொழி யென்றும், அந்த மொழியில் தான் இந்திய அரசியல் அமைப்பை எழுத வேண்டுமென்றும் தெளிவாகக் கூறிவிட்டார். உயர்ந்த இலக்கியமும், நிறைந்த இலக்கணமும், தனி எழுத்தும் இல்லாத இந்துஸ்தானியை நாட்டு மொழியாக உயர்த்த முடியுமா?

மாகாண மொழிகளுக்குப் பதிலாக இந்துஸ்தானியைப் புகுத்தவேண்டு மென்பது தங்கள் கருத்தல்ல வென்றும், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் அந்தந்த இடங்களில் இருக்கு மென்றும், எல்லா மகாணங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தைக்கு உரிய தாக இந்துஸ்தானியை விரும்புகின்றோ மென்றும், தக்கிண பாரத இந்துஸ்தானி பிரசார சபையில் பேசும்பொழுது பேரறிஞர் இராசேந்திர பிரசாது அவர்கள் சொன்னார். அங்ஙனமாயின், இந்திய நாட்டு மொழிக்கு அடிப்படை எங்கே?

நம் தலைவர்களின் மாறுபட்ட முரணான கருத்துக்கள் நமக்கு நன்கு தெரிந்தனவே. மொழியைப்பற்றிய எண்ணத்தைத் தலைவர்கள் இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை. காங்கிரசு ஆட்சியில் இந்துஸ்தானிக்கு என்ன இடம் கொடுக்கவேண்டு மென்பதைத் தாழ்வின்றி விளக்கமாகத் தெளிவுபடுத்தவேண்டும்.

இந்துஸ்தானி நாட்டு மொழி அல்லது 'ராஷ்ட்ர பாஷை' யாகக் கொள்ளப்படாமல், இந்தியாவின் பொது நடை மொழியாக மட்டும், அல்லது இடைநிலை அரசியல் மொழியாக மட்டும் கொள்ளப்பட்டால், ஒருவாறு தடை ஏது மிராது.

ஆனால், அது (இந்துஸ்தானி) எல்லா மாகாணங்களின் அரசியல் மொழியாகத் திணிக்கப் பெற்றால், மிகப் பெருங் கிளர்ச்சி பொங்கி, அதனால் கலவரம் நேரிடும். தொன்று தொட்ட கலையை இழந்த எந்த நாடும் பாழ் நிலமாகி விடுமென்றால், உயரிய தமிழ்க் கலையை இழக்க நேரும்போது, தமிழர் தம் உயிரையும் கொடுக்கத் துணிய மாட்டார்களா?

மொழி ஒரு மக்களிடையே ஒற்றுமையை உண்டு பண்ணி இருக்கின்றதா? ஒரே மொழி பேசும் வடநாட்டிலுள்ள இந்துக்களையும் மகமதியர்களையும் விட வெவ்வேறு மொழி பேசும் தென்னாட்டு இந்துக்களும் வடநாட்டு இந்துக்களும் மிக ஒற்றுமையாக இருக்கவில்லையா? மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க மொழியை விடச் சமயத்திற்கு அதிக ஆற்றலுண்டு. அதற்காக நாம் ஒரு பொதுச் சமயத்தை ஏற்படுத்த முடியுமா?

இப்பொழுது வழங்கி வரும் நூற்றுக் கணக்கான மொழிக ளெல்லாவற்றையும் இந்தியின் பட்டடையில் பலி

கொடுத்தாலொழிய, மொழியினுல்வரும் ஒற்றுமையை எதிர் பார்க்க முடியாது. இந்துஸ்தானி பொது மொழி யாகலா மென்ற உறுதியில்லாத, கற்பனைக் காட்சிக்குரிய கருத்திற்காக, நம் அரிய முன்னோர்கள் நமக்கு வழி வழியாகத் தந்த இழக்கவொண்ணு உரிமையை நாம் குறைவாக மதித்துப் பலி கொடுக்க முடியுமா ?

எந்த வேற்று மொழியும் நாட்டுப் புறங்களில் பரவி அந்த மக்களின் அரசியல் மொழியாக நிலைக்காது. நாம் அடிமையினின்றும் மீண்டு, நம் வேலைகளை நாமே நடத்திக் கொள்ளவும், நம்மொழியின் கலையைக் காத்துக்கொள்ளவும் நாம் உரிமையை நாடினேமே யன்றி, இந்துஸ்தானியைப் போன்ற இன்னொரு வேற்றுமொழியைக் கைக்கொள்வதற் கன்று. ஆங்கிலம் நமக்கு எவ்வளவு வேற்று மொழியோ, அதுபோலவே இந்துஸ்தானியும் அவ்வளவு வேற்று மொழி யாகும். ஒரு அயல் மொழிக்கு மாருக இன்னொரு அயல் மொழியை, அது நம் நாட்டதேயாலுைம், நாம் ஒப்புக் கொள்வது தக்கதன்று.

நாம் நம் மாகாணத்திற்கும் முழு தனியுரிமை பெற்று, நம் மொழியின் கலையை வளர்க்கவேண்டும்.

1939-ல் நம் மாகாணத்தில் இந்தியைக் கட்டாய பாட மாக்கியபொழுது நான் அதை முதன்முதல் எதிர்த்துப் போராட்டத்தை வெற்றியோடு தொடங்கினேன். 1939, மே, முதல் நாளில், அப்பொழுது முதல் அமைச்சராக இருந்த திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களுக்கு எழுதிய தாளும் இன்றுவரை விடை எழுதப்படாம லிருக்கிறது.

'ராஷ்ட்ர பாஷை'யை விளக்கும்படி திரு. காந்தி அடிகட்கு நான் 1946, பிப்பிரவரி முதல் நாள் எழுதிய தாளும், அண்மையில் செய்தித் தாள்களில் வெளிப்படுத்தப்பட்ட 1946, ஜுன், 26 ஆம் தெய்தித் தாளும் இதுவரை விடை எழுதப்படாமலிருக்கின்றன. நாட்டின் கலை இகழ்தற் குரியதோ ?

போர் தொடங்கி விட்டது. ஒவ்வொரு தமிழனும் விழித்து எழுந்து, நம் தாய் மொழியாகிய அரிய இனிய தமிழைக் காக்க முன்வர வேண்டும்.

# திருக்கடவூர்க் கல்வெட்டுக்கள்.

(ஆராய்ச்சிப் பகுதி.)

வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

## முன்னுரை

திருக்கடவூர் என்பது தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைப் (மாயூரந் தாலுகா) பிரிவி லுள்ள தேவாரம் பெற்ற திருப்பதி யாகும். இவ் வூரில் திருக்கடவூர் வீரட்டானம், திருக்கடவூர் மயானம் என்னும் இரு கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள், முன்னையது தருமபுர ஆதீனத்துக்குக் குரியது. இது இக் காலம் அமுர்த கடேசுவரர் கோயில் என்று வழங்கப் பெறுகின்றது. இக் கோயில் கல்வெட்டுக்களை எல்லாம் கல்வெட்டுத் துறையாளர் படி எடுத்துச் சென்றும், அவைகளை இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளியிட்டிலர். ஆனால், அவைகளின் சுருக்கங்கள் கல்வெட்டுத் துறையின் 1906, 1925 ஆம் ஆண்டுகளின் அறிக்கைகளில் வெளிவந்துள்ளன. அவைகளைக் கொண்டு அக் கோயில் கல்வெட்டுக்களைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள இயலாது என்பதை அறிஞர் அறிவர். அது கருதியே, தருமபுர ஆதீனத்தில் அருட் செங்கோல் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் கட்டளைப்படி, 1946, அக்டோபர், 24, 25, 26, திசம்பர், 23, 24 ஆகிய இந் நாட்களில், அக் கோயில் கல்வெட்டுக்களை எல்லாம் படித்து எழுதிவந்தேன். அக் கல்வெட்டுக்களைப்பற்றிய ஆராய்ச்சிப் பகுதி தமிழ் நாட்டிற்குப் பெரிதும் பயன்படு மென்று எண்ணி, அதை நம் தமிழ்ப் பொழிலில் வெளியிடலானேன்.

### சிவபெருமானின் திருப்பெயர்கள்

இத் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் சிவ பெருமான், காலகால தேவர், திருவீரட்டமுடைய பரம சுவாமி, திருக்கடவூர் நாயனுர் என்னும் திருப்பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

### இப் பெருமானை எழுந்தருளுவிக்கப்பெற்ற வேறு ஊர்

இச் சிவபெருமானின் திருப்பெய ருடைய திருமேனி தில்லையாளி நல்லூர், தில்லையாளி ஈசுவர முடையார் கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளது. [தில்லை

யாளி நல்லூரே இக் காலம் தில்லையாடி என்று வழங்கப் பெறுகின்றது.] அது விக்கிரம சோழ தேவரின் நான்காம் ஆட்சி யாண்டிற்கு முன்னரே நிகழ்ந்த தாகும்.

**திருநுந்தா விளக்குகள்**

இத் திருக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற திருநுந்தா விளக்குகள் மிகப்பல வாகும். இவ்வளவு விளக்குகள் அளிக்கப்பெற்ற கோயிலைக் காண்டல் யாண்டும் அரிது.

'விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினு லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னுரே.'

என்னும் திருநாவுக்கரசு பெருந்தகையாரின் திருவாக்கை எண்ணியே அவைகள் அளிக்கப் பெற்றிருக்கவேண்டும். பொன்னையும், ஆடுகளையும், பசுக்களையும், எருமைகளையுமே திருநுந்தா விளக்குகளுக்குக் கொடுப்பார்கள். அவ்வாறு கொடுக்குங்கால், நுந்தா விளக்கு ஒன்றினுக்கு நாடோறும் உழக்கு நெய் எரிப்பதற்கு, ஆடாயின் தொண்ணூற்ருறும், பசுவாயின் நாற்பத்தெட்டும், எருமையாயின் பதினுறுமாக அவைகளின் எண்ணிக்கை இருக்கும். நுந்தா விளக்கு களுக்குக் கொடுக்கப்பட்ட ஆடுகள், 'சாவா மூவாப் பேராடுகள்' என்று கல் வெட்டுக்களில் குறிக்கப் பெற்றிருக்கும். அவைகள் இறப்பது மில்லை, கிழப் பருவம் அடைவது மில்லை என்பது அத் தொடரின் பொருள். எனவே, அவைகளின் இனம் பெருகிக்கொண்டே இருக்கும் என்பது தான் அதன் கருத்தாகும். ஆனல், இவ் வூர்க் கல்வெட்டிலோ, இவ் வூருக்கு அண்மையி லுள்ள எருக் காட்டுச் சேரியில் மணற் குன்று கல்லியும், கழி தூர்த்தும் திருத்தின நிலங்களே திருவிளக்குப் புறமாக விடப் பட்டுள்ளன. அம் முறையில் நிசதி உழக்கு நெய் எரிப்ப தற்கு எழுநூறு குழி விடப்படு மென்று இவ் வூர்க் கல் வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எருக் காட்டுச்சேரி என்னும், ஊரே திருக்கடவூர் வீரட்டான முடையார்க்கு உரியதாய் இருந்தது. இச் செய்தியை 'இத் தேவர் தேவதானம் எருக் காட்டுச்சேரியில்' என்னும் கல்வெட்டுத் தொடரே வலியுறுத்தும்.

**இவ் வூரைத் தன்னகத்து அடக்கிய நாடு**

இவ் வூர் முதலாம் இராசராசன் காலம் முதல், முதற் குலோத்துங்க சோழன் காலம் வரை உய்யக்கொண்டார்

வளநாட்டு அம்பர் நாட்டுக்கு உட்பட்டதாய் இருந்தது. உய்யக்கொண்டார் வளநாடு என்பது காவிரி யாற்றிற்கும் அரிசி லாற்றிற்கும் இடைப்பட்ட நிலப் பரப் பாகும். இவ் வளநாடு, ஆக்கூர் நாடு, அம்பர் நாடு, கூரம்பூர் நாடு, பாம்பூர் நாடு, தென் கரைத் திரைமூர் நாடு, நறையூர் நாடு, திருவழுந் தூர் நாடு, வேணாடு, விள நாடு என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இச் செய்தியைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. இவ் வளநாடு முதற் குலோத்துங்கன் காலம் முதல் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தின் சில ஆண்டுகள் வரை இராசநாராயண வளநாடு, என்னும் பெயருடன் விளங்கி யிருந்தது. மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் இவ் வளநாடு ஜெயங்கொண்ட சோழ வளநாடு என்னும் பெயர் எய்திற்று. இப் பெயரே பிற்பட்ட பாண்டியர், விசயநகர வேந்தர்கள் காலங்களிலும் நின்று நிலவுவ தாயிற்று.

குறிப்பு: இவ் வாராய்ச்சிக்குப் பயன்படக் கூடிய அளவில், இக்கோயில் கல்வெட்டுக்களைக் கீழே குறிப்பிடு கின்றேன்.

(கருப்ப இல்லின் கிழக்குப் புறச் சுவர்)

## கங்கை கொண்ட சோழனின் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரு மன்னி வளர................................ வெறிமலர் தீர்த்தத்து எறி புலன் கங்கையும் மாப்பெருந் தண்டாற் கொண்ட கோப்பர கேஸரி வன்மரான உடை யார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ௰௩ ஆவது உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு திருக் கடவூர் ஸ்ரீ கால கால தேவர்க்கு.....................

## முதற் குலோத்துங்கன் கல்வெட்டு

பூமாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலை கெட வில்லவர் குலைதர ஏனைய மன்னர் இரியலுற்று இரிதர திக்கனைத்துஞ் சக்கர நடாத்தி வீர ஸிம்மாஸனத்து அவனி முழுதுடையாளோடு வீற்றிருந் தருளிய கோவிராஜகேஸரி பன்மரான திரிபுவன சக்கர வத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௰௪ ஆவது ராஜ நாராயண வளநாட்டு அம்பர் நாட்டு உள்பட ஏவிய திருக்கடவூர் உடையார் ஸ்ரீ காலகால தேவர்க்கு.

## மூன்றுங் குலோத்துங்கன் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரை கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டு திருக்கடவூர் உடையார் ஸ்ரீ காலகால தேவர் கோயிலில் திருநுந்தா விளக்கு எரிய ராஜராஜ வளநாட்டு கீழ்வேங்கை நாட்டு பெருநல்லூர் உடையான் திருவனந்தீச நாரான............காளராயன் இத் தேவர் தேவதானம் எருக் காட்டுச்சேரியில் மணற் குன்றில் விளை நிலம் கல்லின குழி நிலம் ஆயிரத்தி நானூற்றினுல் நிலம் அரையே நாலு மாவுக்கு...............

### வளநாடு பிரிக்கப்பட்ட காலம்

முதலாம் இராசராச சோழரின் பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் தான், வளநாடு பிரிக்கப்பெற்றது என்று உரை நடை நூல் எழுதுதலில் வல்லவராய் இருந்த காலஞ்சென்ற திரு. L. உலகநாத பிள்ளை அவர்கள், தாம் எழுதிய **முதல் இராசராசன்** என்னும் நூலில் குறித்துள்ளனர். திருத் துருத்திக் கல்வெட்டுக்களை ஆய்ந்ததன் பயனுய், அம் மன்னனின் 17 ஆம் ஆட்சி ஆண்டே வளநாடு பிரிக்கப் பட்ட காலமென்று யான் எழுதியுள்ளேன். திருக்கடவூர் கருப்ப இல்லின் தென்புறச் சுவரில் உள்ள முதலாம் இராசராச மன்னனின் பதின்மூன்றும் ஆண்டின் கல் வெட்டுச் சுருக்கத்தைக், கல்வெட்டுத் துறையாளர் 1925 ஆம் ஆண்டைய கல்வெட் டறிக்கையில் வெளி யிட்டிருக்கின்றனர். (Ins. No. 242) அக் கல் வெட்டில், உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுக் கடவூர் என்று குறித்திருப்பதாகக் கூறுகின்றனர். ஆயின், அவர் கருத்துப்படி, 13 ஆம் ஆண்டே வளநாடு பிரிக்கப் பெற்ற தாதல் வேண்டும். அக் கல்வெட்டைப் பெரிதும் முயன்று படித்தறிய விரும்பினேன். அதன் ஒரு பகுதி ஒரு கட்டிடத்தின் உள் வைத்துக் கட்டப் பெற்றிருக் கின்றது. ஆகையால், முற்றிலும் படித்தறிய இயல வில்லை. கல்வெட்டுத் துறையாளர் படியெடுத்த காலத்திலும் அது ஒரு கட்டிடத்தின் உள்வைத்துக் கட்டப்பெற்றிருக்கின்றது என்பதை அவர்களும் குறித்திருக்கின்றனர். எனினும், இக் கோயில் கருப்ப இல்லின் (Central Shrine) கிழக்குப் புறச் சுவரில் உள்ள முதலாம் இராசராசனின் 14 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் வளநாட்டின் பெயர் இல்லை. 13 ஆம் ஆண்டில் குறிக்கப்பெற்றிருந்தால், 14 ஆம் ஆண்டிலும்

குறிக்கப்பெற்றிருக்க வேண்டும். அதுவே கல்வெட்டுக் களில் அறிஞர்கள் கண்ட முறை யாகும். முதலாம் இராசராச சோழனின் 13 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் பல வெளிவந்துள்ளன. அவைகளில் வளநாடுகளின் பெயர்கள் காணப்பட வில்லை. திருத்துருத்தி என்னும் ஊர் உய்யக்கொண்டார் வளநாட்டைச் சேர்ந்தது. அவ் வூர்க் கோயிலில் முதலாம் இராசராச மன்னனுடைய 16, 17 ஆம் ஆண்டுகளின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற் றுள் 16 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் வளநாட்டைப் பற்றிய செய்தி இல்லை. 17 ஆம் ஆண்டில் தான் வளநாடு குறிக்கப் பெற்றுள்ளது. கல்வெட்டுத் துறையாளர் ஊகம் கொண்டு வளநாட்டைக் குறிப்பிட்டு விட்டனரா? எனவே, இது பெரிதும் ஆராய்தற் குரிய தாகும்.

சேக்கிழார் முதற் குலோத்துங்கன் காலத்தவர் என்ப தற்கு ஆராய்ச்சியாளர் காட்டும் இவ் வூர்க் கல்வெட்டும், அதைப் பற்றிய மறுப்புரையும்

வரி

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ ஜயங்கொண்ட சோழ மண்டலத் துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுக்

(2) குன்றத்தூர் சேக்கிழாந் அம்மை அப்பர் கேரளாந்தகத் தேவநாந கரிகால சோழப் பல்லவரையன் ஜயங்கொண்ட சோழ வள நாட்டு ஆக்

(3) கூர் நாட்டுத் திருக்கடவூர் உடையார் ஸ்ரீகால காலதேவர் கோயிலில் திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யா

(4) ண்டு நாலாவது முதல் எரிகிற திருநுந்தா விளக்கு சந்திராதித்தவல் செல்ல இத்தேவர் தேவதாநம் எருக்காட்டுச்சேரியில் மணற்குன்று கல்வி

(5) யும் கழி தூர்த்தும் திருத்தின நிலம் ஆறு மாவுக்கு இக் கோயிலில் எரியும் திருநுந்தா விளக்கு ஒன்று உ

இக் கல்வெட்டு இரண்டாம் பிராகாரத்தின் தெற்குப் புறச் சுவரில் இரண்டாம் பத்தியில் (Second Block) பொறிக்கப் பெற்றிருக்கின்றது. இது குன்றத்தூரி லிருந்த சேக்கிழான் அம்மையப்பன் கேரளாந்தகத் தேவனான கரிகால சோழப் பல்லவரையன், இவ் வூர்க் காலகால தேவர்க்கு ஒரு திருநுந்தா விளக்குக்கு நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றது.

**சில குறிப்புக்கள்**

ஜயங்கொண்ட சோழ மண்டலம்:-முதலாம் இராசராச சோழன் தொண்டை மண்டலத்தை வென்றபின், அதற்கு அவன் வைத்த பெயர்.

குலோத்துங்க சோழ வளநாடு:-தொண்டை மண்டலத்தின் இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்துக்கு, முதற் குலோத்துங்க சோழன் வைத்த பெயர். இக் கல்வெட்டு முதற் குலோத்துங்கன் காலத்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுநிற்பர். அவன் காலத்தது ஆயின், கடலூரைக் குறிப்பிட வந்த இக் கல்வெட்டில், இராசநாராயண வளநாட்டைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடாமல், இது சயங்கொண்ட சோழ வளநாட்டைக் குறிப்பிடுகின்றது. சயங்கொண்ட சோழ வளநாடு என்னும் பெயர் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் தான் வைக்கப்பெற்றது. [இதை, 'இவ்வூரைத் தன்னகத்து அடக்கிய நாடு' என்ற தலைப்பின் கீழ் விளக்கியுள்ளேன்.] எனவே, இக் கல்வெட்டு முதற் குலோத்துங்கன் காலத்தது என்பார் கூற்று வலிமை யுடைத்தாய் இல்லை.

மேலும், இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற சேக்கிழான் அம்மையப்பன் கேரளாந்தகத் தேவனான கரிகால சோழப் பல்லவரையன் பெரியபுராண ஆசிரியராக இருக்கக் கூடுமா என்பது தக்கார் ஒருவரின் கருத்தாகும். அத் தக்கார் உமாபதிசிவம் அருளிய பெரியபுராண ஆசிரிய ராகிய சேக்கிழார் வரலாற்றை நன்கு உணர்ந்தவரே யாவர். இதுகாறும் எடுத்த எல்லாக் கல்வெட்டுக்களும், எடுக்காத கல்வெட்டுக்களும் வெளிவரின், இத் தக்கார் கருத்தின் உண்மை விளங்கும்.

**அறியப்படும் புலவர் பெருமக்கள்**

வீராந்தப் பல்லவரையர்:-இவர் மூன்றாங் குலோத்துங்க சோழனால் நன்கு மதிக்கப்பெற்ற ஒரு பெரும் புலவ ராவர். இவரது வேண்டுகோளுக்கு இணங்கியே, பாரசிவன் பொன்னனான கால விநோத நித்தப் பேரய்யனுக்கு இக் கோயில் நட்டுவ நிலை வேலை உறுதியாயிற்று.

காலகாலன் ஈழத்தரையன் :-முதல் பிராகாரத்துக் கோபுர வாயிலில் பொறிக்கப்பெற்றுள்ள 'ஸ்வஸ்தி ஸ்ரீ திங்களும் இவரில் அழிந்த சந்திராமுத செங்கைநில்லாச் சங்கமும்' என்று தொடங்கும் பாடலைப் பாடியவ ராவர்.

---

# உள நூல்

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

## பெண்களின் மனம்.

இப் பெயரைப் பார்த்த மாத்திரத்திலேயே ஆடவர்களின் மனத்திற்கும் பெண்களின் மனத்திற்கும் வேறுபாடு கூறப்புகுதற் காகும் என்று சிலர் எண்ண இட முண்டாகும். பின்னர்க் கூறுவனவற்றை நோக்கி ஒரு முடிவுக்கு வருதலே நலமாகும்.

எல்லாராலும், என்றும், பாராட்டக்கூடிய ஒளவையார் பெண்பாலரே யாம். இவர் கூறிய அனைத்தும், தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. இக் காலத்திலும் பெண்மக்களிற் சிலர் பேரறிஞராய்த் திகழ்கின்றார்கள். இவ்வாறிருக்கவும்,

> மறங்கிளரு மதர்நெடுங் கண்ணியர்தம் மனமொன்றிற்
> செறிந்துறுமுடன் பிரியுமெனத் தெளிவுடையோர் செப்புதலால்

என அதிவீரராமபாண்டியரும்,

> தெரிவையர் மனமெனக் கறங்கெனத் திரிந்தான்

எனக் கம்பரும்

> மகளிர் மனம்போல வேறுபடும்

எனத் திருவள்ளுவரும்,

> கள்ளுற்ற கூந்தற் கனங்குழையார் கருத்து

என்று கச்சியப்பரும்,

> மனமொழி மெய்யொருங்க மங்கைய ரரியர்

எனச் சிவப்பிரகாச சுவாமிகளும், கூறியிருத்தலால், பெண் மனம் ஒன்றில் நிலைபெறாமல் வேறுபட்டுக்கொண்டே யிருக்கும் என்று தெரியவருகிறது. இக் கருத்துபற்றியே,

'தையல் சொற்கேளேல்' என ஔவைப் பிராட்டியாரும் மொழிந்துள்ளார்.

பெண்மக்கள் கணவனுடன் வாழவேண்டிய முறை கூறுமிடத்து, மந்திரிபோலத் தன் கணவனுக்கு புத்தி சொல்லும் ஆற்றல் அமைந்திருக்கவேண்டும் என்று கூறுவதாலும், தொல்காப்பியம் முதலிய அரும் பெரும் நூல்களில், 'குணம், நலன், கல்வி' தலைவிக்கும் ஒத்து இருக்க வேண்டுமென்று இலக்கணங் கூறியிருத்தலினாலும், 'உருவோடு அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்ணென்பாள்' என நான்மணிக்கடிகை இயற்றிய விளம்பிநாகனார் மொழிவதாலும், 'பெருந் தடங்கட் பிறைநுத லார்க்கெலாம், பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்' என மற்றோரிடத்தில் கம்பரே சொல்லியிருத்தலாலும், பெண்பாலரும் ஆடவர்களைப்போலச் சிறந்த மனத்துடன் விளங்குவர் என்று தெரியவருகிறது.

முற் கூறியதற்கு இக் கருத்து மாறுபடுகின்றதே, எவ்வாறு முடிவு செய்தல் நலம் என்னின், ஆடவர்களைப் போலப் பெண்பாலரிலும், அறிவுடையார், அறிவு இலர் என்று சிறு பிரிவாகப் பிரித்துக் கொள்ளுதலே சாலவுஞ் சிறந்ததாகும். 'பெண்ணின் மனம் ஒருவழி நில்லாது' என்றது, சிறு இன்பங் காரணமாகக் கற்புத் துறந்து உறுதிப் பொருளை நினையாப் பெண்மக்களை மாத்திரமே குறிக்குந் தன்மையுடையது.

இதனால் பெண்கள் நிலைத்த மன முடையார், நிலையிலா மனமுடையார் என இரு வகைப் படுவர் என்பதும், பொது மகளிரையே இலக்கியங்களில் இழிவாகக் கூறப்பட்டது என்பதும், ஆடவர்களைப்போலப் பெண்களிலும் சிறந்த பெண்கள் உண்டு என்பதும் முடிவாகக் கொள்க.

# மொழியரசி வெளியீட்டு விழாக் கழகம், திருவாரூர்.

நமது அருமைத் தாய்மொழி யாகிய தமிழ் மொழி உலகில் பேசப்படுகிற, பேசப்பட்ட எல்லா மொழிகளிலும் எத்தனையோ வகைகளில் மேம்பட்டு விளங்குவதுடன், ஒப்புயர்வு அற்ற முறைகளில் போற்றவும், ஆராயவும் பட்டிருப்பதைத், திருவாரூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருவாளர் சாமி. **வேலாயுதம் பிள்ளை** அவர்கள், பி. ஏ., எல். டி., பல்லாண்டுகள் உழைத்ததின் பயனாகக் கண்டு பிடித்துப், பலப்பல விடங்களில் சிதறுண்டு கிடப்பவற்றை யெல்லாம் ஒரு சேரத் தொகுத்து. யாவரும் வியக்கத்தக்க வகையில் **மொழியரசி** என்னும் பெயருடன் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக அச்சிட்டு வருகிறார்கள். அதன் முதற் பகுதியாகிய **தமிழ்த் தெய்வ மாலை** இவ்வாண்டு கலைமகள் விழாவின் பொழுது வெளிவரும் நிலையில் உள்ளது. இவ்வரிய நூல் திருவாரூரில் அரங்கேற்றி வெளிவர விருக்கிறது. செந்தமிழ்ச் செல்வர்களாகிய திரு. க. சண்முகம் பிள்ளை, B. A., அவர்கள், திரு. க. க. சிவவடிவேல் உடையார் அவர்கள் வேண்டுகோட் கிணங்க இருநூறு அன்பர்கள் மொழியரசி வெளியீட்டுக் கழக உறுப்பினராகச் சேர்ந்து, நாளிது ஆவணித் திங்கள், 22உ (7—9—47) ஞாயிறு மாலை 6-15 மணிக்குத் திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் உறுப்பினர் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்போது ஜனாப் S. சையத் இபுராகிம் பகதூர், M.A., B.L. சில்லா, நீதிபதி, (District Munsif) அவர்கள் தலைமையில் கூடி, மொழியரசி வெளியீட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக், கீழே காணுமாறு செயற் குழு அமைத்தனர்.

**ஆதரிப்பாளர்.**

1. இராவ் பகதூர் திரு. A. Y. அருளானந்தசாமி நாடார்
2. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை
3. திரு. G. இராமநுச முதலியார்
4. திரு. ஆவராணி சண்முகசுந்தரம் பிள்ளை
5. திரு. K. சித்திவிநாயக முதலியார்

**தலைவர்:** திரு. V. S. தியாகராச முதலியார் எம். ஏ.

**உதவித் தலைவர்:** 1. திரு. T. N. சபாபதி முதலியார்,
2. திரு. R. S. தட்சிணாமூர்த்தி பிள்ளை

**அமைச்சர்கள்:**

திரு. க. சு. சிவவடிவேல் உடையார்
திரு. க. சண்முகம் பிள்ளை, பி. ஏ.

**பொருளாளர்;** திரு. K. T. R. கோபால கிருட்டின ராசு

**உறுப்பினர்:**

| | | |
|---|---|---|
| 1 | திரு | சையத் இபுராஹீம் |
| 2 | ,, | R. கோபிநாத ராவ் |
| 3 | ,, | S. சகநாத செட்டியார் |
| 4 | ,, | T. S. தியாகராய ஞானியார் |
| 5 | ,, | M. இராமதாசு முதலியார் |
| 6 | ,, | K. S. S. இராசன் |
| 7 | ,, | காப்டன் M. நாராயணசாமி |
| 8 | ,, | இராசகோபால பிள்ளை |
| 9 | ,, | சிக்கல் இரத்தினசபாபதி |
| 10 | ,, | V. குப்புசாமி பிள்ளை |
| 11 | ,, | ச. க. தியாகராய பிள்ளை |
| 12 | ,, | பஞ்சரத்தினம் பிள்ளை |
| 13 | ,, | T. சோமாஸ்கந்த தேசிகர் |
| 14 | ,, | K. அமிர்தலிங்க முதலியார் |
| 15 | ,, | M. G. வேங்கடாசலம் பிள்ளை |
| 16 | ,, | A. N. இரத்தினம் பிள்ளை |
| 17 | ,, | வ. து. இராமநாதன் செட்டியார் |
| 18 | ,, | A. V. இராமையா முதலியார் |
| 19 | ,, | துரைராசு |
| 20 | ,, | S. P. கிருட்டினசாமி |
| 21 | ,, | M. இரத்தினசாமி தேசிகர் |

செந்தமிழ்த் தாயின் திருவடி பரவிய தொண்டர்களையும் மொழியரசி ஆசிரியரையும், வரவேற்றுப் பாராட்டித் தக்கபடி சிறப்புச் செய்து, மொழியரசியின் திருவோலக்கங் கண்டு மகிழ் தற் கான ஏற்பாடுகளைச் செயற் குழுவினர் மன முவந்து ஊக்க முடன் செய்து வருகின்றனர்.